ஹைட்ரோகார்பன் (Hydrocarbon) பொருட்கள் மாற்றும் பணி(Material Transfer)

எப்போது முடிக்க வேண்டும் - மொபைல் உபகரணங்களுக்கு இடையில் ஹைட்ரோகார்பன்களின் பரிமாற்றம் தொடங்குவதற்கு முன்பு

தொடங்குவதற்கு முன் கீழே உள்ள ஒவ்வொரு கட்டுப்பாடும் / பாதுகாப்பையும் உறுதிப்படுத்தவும் வேலை	ஒவ்வொரு கட்டுப்பாடு / பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்கான வழிகாட்டுதல்	பணியைச் செய்யும் நபர்(கள்)	வேலை தொடக்க சரிபார்ப்பாளர்
நான் உறுதிப்படுத்தியுள்ளேன்:			
1 **உபகரண இயக்குபவர் (Operator) மற்றும் தேவையான இடங்களில் கண்காணிப்பாளர் (Attendant), இந்த பணியை செய்ய தேவையான தகுதியும் பயிற்சியும் பெற்றுள்ளனர்.**	• பயன்படுத்தப்படும் உபகரணத்திற்கான Operator மற்றும் Attendant-ன் தகுதி பதிவுகள் (Qualification Records) சரிபார்க்கப்பட்டுள்ளன. • வேலை தொடங்கும் முன், Operator-ன் திறன் மற்றும் அனுபவம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. • நிலைமின்சாரம் (Static Electricity), தரையுடன் இணைத்தல் (Grounding), பொருள் மாற்றும் குழாய் (Transfer Line) பயன்பாட்டு முறை, அவசரகால நடவடிக்கை முறை (Emergency Response Procedure) மற்றும் மாற்றப்படும் பொருளின் ஆபத்துகள் குறித்து நல்ல அறிவு உள்ளன.		
2 **ஏற்றப்படும் அல்லது இறக்கப்படும் பொருள், சரியான பொருள்தானா என்பதும், பயன்படுத்தப்படும் உபகரணங்களுடன் பொருந்துமா என்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பொருட்கள் மாற்றும் பணியில் பயன்படுத்தப்படும் கடத்தும் தன்மை கொண்ட ஹோஸ்கள் (Conductive Hoses), இணைப்புகள் (Connectors) மற்றும் நிலைமின்சார கம்பிகள் (Static Lines), மாற்றப்படும் பொருளுக்கும் பணிக்கும் ஏற்ற வகையில் உள்ளன.**	• ஓட்டுநர் வழங்கிய விநியோக ஆவணங்கள் (Delivery Sheets) சரிபார்க்கப்பட்டு, ஏற்றப்படும் பொருள் சரியான சேமிப்பு தொட்டிக்குள் செல்கிறது என்பதை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. • மாற்றப்படும் பொருளின் SDS (Safety Data Sheet) சரிபார்க்கப்பட்டு, பயன்படுத்தப்படும் உபகரணங்கள் மற்றும் சேமிப்பு தொட்டி அந்த பொருளுக்கு ஏற்றதாக உள்ளதா என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதில் இரசாயன (Chemical) மற்றும் வெப்பநிலை (Thermal) வரம்புகளும் சரிபார்க்கப்பட்டுள்ளன. • ஹோஸ் (Hose) அடையாள விவரம் மற்றும் பரிசோதனை பதிவுகள் சரிபார்க்கப்பட்டுள்ளன.		
3 **இந்த பணிக்குத் தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் (PPE) நல்ல நிலையில் இருந்து, சரியான முறையில் அணியப்பட்டுள்ளன.**	• வேலை அனுமதி ஆவணத்தில் (CoW Documentation) குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து PPE-களும் பயன்படுத்தப்பட்டுள்ளன. • பணியில் உள்ள ஆபத்துகளுக்கு ஏற்ப (எ.கா., வெப்பநிலை, இரசாயனம், அழுத்தம் போன்றவை) பொருத்தமான PPE தேர்வு செய்து பயன்படுத்தப்பட்டுள்ளது.		
4 **எளிதில் தீப்பற்றக்கூடிய பொருட்களை (Flammable Substances) மாற்றும் போது, பயன்படுத்தப்படும் உபகரணங்கள் தரையுடன் இணைக்கப்பட்டுள்ளன (Grounded) என்பதை உறுதிப்படுத்தவும்.**	• Grounding Clamp, Grounding Point மற்றும் இணைப்பு பகுதிகளுக்கு இடையில் தொடர்ச்சியான இணைப்பு (Continuity) இருப்பதும், அதன் மதிப்பு 10 Ohms-க்கு குறைவாக இருப்பதும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. • Paint பூசப்பட்ட மேற்பரப்புகள் அல்லது உறுதியாக பொருத்தப்படாத உலோக பகுதிகள் Grounding Point ஆக பயன்படுத்தப்படவில்லை. • Grounding உபகரணங்கள் நல்ல நிலையில் இருந்து, சரியாக செயல்படுகின்றன.		
5 **எளிதில் தீப்பற்றக்கூடிய பொருட்களுக்கு (Flammable Substances), பொருள் மாற்றும் ஹோஸ் (Transfer Hose) முழுவதும் மற்றும் ஒவ்வொரு இணைப்பு பகுதியிலும் தொடர்ச்சியான மின்னியல் இணைப்பு (Continuity) இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.**	• அமைப்பில் உள்ள அனைத்து இணைக்கப்பட்ட பகுதிகளிலும் (எ.கா., டிரக், சேகரிப்பு தொட்டி, பாத்திரம், ஸ்கர்பர் அமைப்பு) தொடர்ச்சியான இணைப்பு இருப்பது மற்றும் ஒவ்வொரு இணைப்பும் 10 Ohms-க்கு குறைவாக இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. • ஒரே ஹோஸின் முழு நீளத்திலும் தொடர்ச்சியான இணைப்பு இருப்பது மற்றும் அதன் மதிப்பு 100 Ohms-க்கு குறைவாக இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. • மொபைல் கிரவுண்ட் சரிபார்ப்பு கருவி (MGV) அல்லது Ohms Meter நல்ல நிலையில் இருந்து, சரியாக செயல்படுகிறது.		

6 **பொருட்கள் மாற்றும் போது, உபகரணங்களில் அதிக அழுத்தம் (Over Pressure) அல்லது குறைந்த அழுத்தம் (Under Pressure) ஏற்படாமல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.**	• அனுப்பும் தொட்டி (Source Container) மற்றும் பெறும் தொட்டியின் (Receiving Container) அழுத்த வரம்புகள், உபகரண அடையாளம், பரிசோதனை பதிவுகள் அல்லது வரைபடங்கள் மூலம் சரிபார்க்கப்பட்டுள்ளன. • அழுத்த வரம்புகள் வேலை அனுமதி ஆவணத்தில் (CoW) பதிவு செய்யப்பட்டு, உபகரண இயக்குபவருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளன. • அதிக அழுத்தம் ஏற்படாமல் தடுக்க அழுத்த நிவாரண உபகரணங்கள் (Pressure Relief Equipment) பொருத்தப்பட்டுள்ளன. • குறைந்த அழுத்தம் ஏற்படாமல் தடுக்க காற்று வெளியேற்றக் குழாய்கள் (Vent Lines) திறந்த நிலையில் உள்ளன அல்லது Vacuum Breaker பொருத்தப்பட்டுள்ளது.		

இந்த கட்டுப்பாடுகள் / பாதுகாப்புகள் நடைமுறையில் உள்ளனவா மற்றும் வேலையைத் தொடங்குவதற்கு முன்பு சரிபார்க்கப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்தவும். ஏதாவது மாற்றம் ஏற்பட்டால் நிறுத்தி உதவியை நாடுங்கள்.

	அச்சிடப்பட்ட பெயர் மற்றும் பொறுப்பு	கையொப்பம்	தேதி
வேலை தொடக்க சரிபார்ப்பாளர்			

ஹைட்ரோகார்பன் (Hydrocarbon) பொருட்கள் மாற்றும் பணி(Material Transfer)

